# கம்பர் தமிழ்ப்பள்ளியின் கல்விச் சுற்றுலா அறிக்கை

கடந்த                    நாள் கம்பர் தமிழ்ப்பள்ளியின் அறிவியல் கழகம் கேமரன் மலைக்குக் கல்விச் சுற்றுலா ஒன்றனை மேற்கொண்டது.

இச்சுற்றுலாவில் மொத்தம் நாற்பது மாணவர்களும் பத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். சுற்றுலா நாளன்று மாணவர்கள்
மணிக்கெல்லாம் பள்ளிக்கு வந்திருந்தனர். காலை 7.30 மணியளவில் பேருந்து பள்ளியை விட்டுப் புறப்பட்டது.

மாணவர்கள் சிலருக்குக்

பள்ளிப் பேருந்து தாப்பா எனும் ஊர் வரும் வரை நெடுஞ்சாலையிலேயே சென்றது. அதன் பிறகு, கேமரன் மலைக்குச் செல்லும் சாலை வளைந்து நெளிந்து இருந்தது. சாலையின் இரு பக்கமும் பசுமையான காடுகள் இருந்தன.

மலைச் சரிவினில் பசுமையான தேயிலைத் தோட்டங்கள் இருந்தன.
பேருந்து

அங்குள்ள தமிழ்ப்பள்ளியில் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பள்ளியின் ஆசிரியர்களும் மாணவர்களும் இன்முகத்துடன் வரவேற்றனர்.                    மாணவர்கள் செம்புற்றுப் பழத்தோட்டத்திற்குச் சென்றனர்.

பழத்தோட்டத்தின் உரிமையாளர் மாணவர்களை வரவேற்று அத்தோட்டத்தைச் சுற்றிக் காண்பித்தார்.

செம்புற்றுப் பழச்சாறு, பழக்கூழ் செய்யும் விதத்தையும் மாணவர்கள் பார்க்க வாய்ப்புக் கிட்டியது.

LIVEWORKSHEETS

அப்பழத்தோட்டத்தின் உரிமையாளர் சில செம்புற்றுக் கன்றுகளை மாணவர்களுக்கு வழங்கினார். மாணவர்கள் காரணம் அறியாது விழித்தனர். சற்று நேரத்தில் கறுப்பு நிற நெகிழிப் பைகளைக் கொடுத்து மண் நிரப்பி அதில் அக்கன்றுகளை நட்டு வைக்கப் பணிக்கப்பட்டனர்.

அது மாணவர்களுக்கு இனிமையான அனுபவமாக அமைந்தது. மாணவர்களும் ஆசிரியர்களும் தேவையான பழங்கள், பழக்கூழ் போன்றவற்றையும் வாங்கினர். அடுத்துச் சுற்றுலாப் பேருந்து தேயிலைத் தோட்டத்திற்குச் சென்றது.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலைப் பொட்டலங்கள் ஓரிடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

அன்றிரவு பிரிஞ்சாங் பட்டணத்தில் உள்ள விடுதி ஒன்றில் மாணவர்கள் தங்கினர். சில்லென்று வீசிய காற்று, பிரிஞ்சாங் பட்டணம் கேமரன் மலையிலேயே மிக உயரமான இடத்தில் இருப்பதை உறுதிப்படுத்தியது.

மாணவர்களில் சிலர் காய்கறிகள், பூக்கள் ஆகியவற்றை வாங்கிக் கொண்டனர். நண்பகலில் மதிய உணவை முடித்துக் கொண்டு அனைவரும் பேருந்தில் ஏறினர். பேருந்தும் புறப்பட்டது.

பேருந்து மலையிலிருந்து கீழே இறங்கும்போது மாணவர்கள் சற்றுப் பயத்துடன் காணப்பட்டனர். எனினும், பேருந்து ஓட்டுநர் பாதுகாப்பாகவே பேருந்தைச் செலுத்தினார்.

LIVEWORKSHEETS

இந்தச் சுற்றுலா ஓர் இன்பச் சுற்றுலாவாகவே அமைந்தது.

அறிக்கையைத் தயாரித்தவர்,

*மணிவண்ணன்*

(மணிவண்ணன் த/பெ அரவிந்தன்)

ஏற்பாட்டுக்குழுச் செயலாளர்

கம்பர் தமிழ்ப்பள்ளி.

LIVEWORKSHEETS